1990 சனவரி 22]

ஆதிகேசவப் பெருமாள் கோயில் மிகவும் சீர்கெட்டு இருக்கிறது. அதைத் திருத்தியமைக்கின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். அதைப் போலவே, கழகத் தலைவருடைய காலத்தில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் கேள்விக்கு அமைச்சருடைய விடை எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்கின்ற அந்தக் கோயிலைப் பற்றிய விவரம் அறநிலையத் துறையினிடத்திலே இல்லை. அதுபற்றிய விவரத்தை என்னிடத்திலே தந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்; அதைப்போலவே, ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தானம் என்பது கோட்டூரிலே இருக்கிறது. பிரபல தொழிலதிபரும், சென்னை மாலை முரசினுடைய பத்திரிகையாளருமான அவர்கள் முன் வந்து, அங்கே கலைஞருடைய பெயராலே திருமண மண்டபம் கட்டித் தர இருக்கிறார்கள். அதில் ஒரு பகுதி அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். மீதிப் பகுதியை நமது அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி; அவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பணிகளில் மொத்த மதிப்பீடு என்ன, நன்கொடையாளர்கள் எவ்வளவு தருகின்றார்கள் என்பதைப் பொறுத்து நிச்சயமாக அறநிலையத் துறையும் அதிலே பங்கு கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

காளியம்மன் கோயில் திருப்பணி.

*5787—திரு. எம். சேட்டு: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், செங்கம் அருள்மிகு வேணுகோபால பார்த்தசாரதிப் பெருமாள் வகையறா திருக்கோயில்களில் ஒன்றான காளியம்மன் கோயில் திருப்பணி நிறைவு பெறாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[1990 சனவரி 22

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி ; தலைவர் அவர்களே, (அ) செங்கம் காளியம்மன் கோயில் திருப்பணி முற்றுப் பெறாமல் இருப்பது அறநிலையத் துறை ஆணையருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு இருக்கின்றது.

(ஆ) இத்திருக்கோயில் திருப்பணிக்காக அமைக்கப் பட்ட திருப்பணிக் குழு சரிவர இயங்கவில்லை. ஏறத்தாழ இலட்சத்து ஆறாயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே 1974ஆம் ஆண்டு அங்கீகாரம் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு பல ஆட்சிகள் மாற்றம். ஆகவே. எப்படியோ இந்தத் திருப்பணிகள் அங்கே சரிவர நடைபெறவில்லை. 1989 ஆம் ஆண்டு தொடக்கத்திலே அங்கே இருக்கின்ற அறங்காவலர் குழுவினரும் சரியாக இயங்கவில்லை என்ற புகார் வந்தது. அந்தப் புகார்களை விசாரித்து அறங்காவல் குழுத் தலைவரை நீக்கிவிட்டு, 1—4—1989 முதல் செங்கம் பிரிவு ஆய்வர் செயல் அலுவலராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். இப்போது புதிய மதிப்பீடு போடப்பட்டு வருகின்றது. எஞ்சியுள்ள பணி களும் விரைவில் முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. எம். சேட்டு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் என்னுடைய தொகுதி செங்கம் வட்டம், காளியம்மன் கோயில் பணிகள் 10 வருடத்திற்கு முன்னே அது செய்து நிறுத்தப்பட்டது. அந்தக் காளியம்மன் கோயில் இந்த அரசின் மூலமாகக் கட்டித் தரப்படுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1974 ஆம் ஆண்டிலிருந்து மானியமாக 25,000 ரூபாயும் மற்ற கோயில்களிலிருந்து நிதி மாற்றமாக 21,000 ரூபாயும், ஆக 46,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக் கிறது. ஏறத்தாழ 30,000 ரூபாய்வரை செலவு செய்யப் பட்டிருக்கிறது. மீதி பணம் வங்கியில் இருக்கிறது. வட்டியும் சேர்த்து ஏறத்தாழ 25,000 ரூபாய் வங்கியில் இருக்கிறது. 1974 ஆம் வருடம் என்றால், 15 ஆண்டுகளுக்கு முன்பு போடப் பட்ட மதிப்பீடு. இன்றைய மதிப்பீடு அதிகமாகி இருக்கும். சட்டமன்ற உறுப்பினரும் அதிலே பங்கு கொண்டு பொது மக்களுடைய நன்கொடையையும் கணிசமாகச் சேர்த்துத் தந்தால் நிச்சயமாக அந்தப் பணிகள் துரிதமாக முடிக்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 2119 மற்றும் 3313 மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

(10.00 மணி)

திரு. கோ. பூவராகன் : சார், ஒரு information. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே "information" வராது.